# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2003, பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துப்பட்டது.]

ச. வ.— ஓ. 90/2002

## 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பற்றுக்கள் வரி விதிப்பனவு. 2. பதின்மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக —

(அ) வர்த்தக வங்கியொன்றில் பேணப்படும் நடைமுறைக் கணக்கு ஒவ்வொன்றிற்கும் எதிராக ஒவ்வொரு பஞ்சாங்க மாதத்திலும் செய்யப்பட்ட பற்றுக்கள் மொத்தத் தொகை மீதும் ;

(ஆ) வர்த்தக வங்கியொன்றில் அல்லது விசேட வங்கியொன்றில் பேணப்படும் சேமிப்புக் கணக்கு ஒவ்வொன்றிற்கும் எதிராக ஒவ்வொரு பஞ்சாங்க மாதத்திலும் செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்தத்தொகை மீதும் ; அத்துடன்

(இ) வைப்புச் சான்றிதழொன்றை அல்லது பிரயாணிகளின் காசோலையொன்றைக் காசாக மாற்றுவதன்மூலம் தேறும் தொகையொன்று மீதும்,

விடயத்துக்கேற்ப மொத்தப் பற்றுத் தொகையின் அல்லது பணமாக மாற்றப்பட்ட தொகையின் ஒரு நூற்றுவீதத்தின் பத்திலொன்று என்ற வீதப்படி பற்றுக்கள் வரி என அழைக்கப்பட வேண்டிய வரியொன்று விதிக்கப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அஅ) வர்த்தக வங்கியொன்றில் அல்லது விசேட வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கொன்றிலிருந்தான பற்று ஒன்றின் விடயத்தில், எந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரில் அக்கணக்குப் பேணப்படுகின்றதோ அந்த ஆளினால் அல்லது ஆட்களினால் செலுத்தப்படுதல் வேண்டும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அஅ) வர்த்தக வங்கியொன்றில் அல்லது விசேட வங்கியொன்றில் பேணப்படும் சேமிப்புக்கணக்கொன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பற்று ஒன்றின் விடயத்தில் பற்றுச்செய்யப்பட்ட மாதத்தின் முடிவில் தொடங்குதல் வேண்டும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, "நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களினின்றும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நடைமுறைக் கணக்கு அத்துடன் சேமிப்புக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களினின்றும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "வர்த்தக வங்கி ஒவ்வொன்றும்" என்பதிலிருந்து "அனுப்புதல் வேண்டும் :" என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கஞ்செய்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"(1) வர்த்தக வங்கி அல்லது விசேட வங்கி ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதத்தின் கடைசி வேலை நாளன்றும் அவ்வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கு அல்லது சேமிப்புக் கணக்கு ஒவ்வொன்றிலுமிருந்தும், அம் மாதம் தொடர்பில் அக்கணக்கிலிருந்து பற்றுக்கள் வரியாக செலுத்தப்படற்பாலதான தொகைக்குச் சமமான பணத்தொகையொன்றை மீளப்பெற்று அடுத்து வருகின்ற மாதம் ஒவ்வொன்றினதும் கடைசி வேலை நாளன்று அல்லது அதற்குமுன்னர் அத்தகைய பணத்தொகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும் :";

(2) ஓராம் உட்பிரிவுக்கான முதலாம் காப்புவாசகத்தில் "ஏதேனும் மாதத்தின் ஆரம்பம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் மாதத்தின் கடைசி நாள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) ஓராம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்பு வாசகத்தை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன்மூலமும் :—

"ஆயினும் மேலும், குறிப்பிட்டவொரு மாதத்தின் போது ஒரு நடைமுறைக்கணக்கின் அல்லது சேமிப்புக் கணக்கின் வரிப்பொறுப்பு இருபது ரூபாவுக்குக் குறைவாக இருப்பின், அத்தகைய நடைமுறைக் கணக்கிலிருந்து அல்லது சேமிப்புக் கணக்கிலிருந்து பற்றுக்கள் வரியானது மீளப்பெறப் படுதலாகாது.";

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "பெயரில் அல்லது பெயர்களில் வர்த்தக வங்கியில் நடைமுறைக்கணக்கு பேணப்படுகின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெயரில் அல்லது பெயர்களில் வர்த்தக வங்கியில் அல்லது விசேட வங்கியில் நடைமுறைக் கணக்கு அல்லது சேமிப்புக்கணக்குப் பேணப்படுகின்றதோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் —

(அ) "நடைமுறைக்கணக்கில் நிதி இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது நடைமுறைக் கணக்கொன்றில் நிதியின் போதாமை காரணமாக அத்தகைய கணக்கு பேணப்படும் வர்த்தக வங்கியானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நடைமுறைக்கணக்கில் அல்லது சேமிப்புக்கணக்கில் நிதி இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது நடைமுறைக் கணக்கொன்றில் அல்லது சேமிப்புக்கணக்கொன்றில் நிதியின் போதாமை காரணமாக அத்தகைய கணக்குப் பேணப்படும் வர்த்தக வங்கியானது அல்லது விசேட வங்கியானது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவில் "உடன்முன்னரான மாதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அம்மாதம் தொடர்பில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(6) நாலாம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில், "வர்த்தக வங்கியானது;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கியானது, அல்லது விசேட வங்கியானது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(7) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் —

(அ) "வர்த்தக வங்கியொன்றில் பேணப்படும் ஏதேனும் நடைமுறைக்கணக்கிலுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வர்த்தக

வங்கியொன்றில் அல்லது விசேட வங்கியொன்றில் பேணப்படும் ஏதேனும் நடைமுறைக்கணக்கிலுள்ள அல்லது சேமிப்புக் கணக்கிலுள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) "செலுத்த மறுப்பதற்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலாகாது" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "செலுத்த மறுப்பதற்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலாகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, "நடைமுறைக் கணக்கொன்றை வைத்திருப்பவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நடைமுறைக்கணக்கொன்றை அல்லது சேமிப்புக் கணக்கொன்றை வைத்திருப்பவர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நடை முறைக்கணக்கொன்றிலிருந்து அல்லது சேமிப்புக்கணக்கொன்றிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) ஓராம் உட்பிரிவில் பின்வருமாறு :—

(அ) "வர்த்தக வங்கியொன்று" என்னும் சொற்களிலிருந்து "கொடுத்துதவுதல் வேண்டும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "வர்த்தக வங்கியொன்று அல்லது விசேட வங்கியொன்று 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணத் தொகைகளை அனுப்புகையில் விசேட

நடைமுறைக்கணக்கொன்று தவிர்ந்த வாடிக் கையாளர் ஒருவரின் சார்பில் பேணப்படும் வேறு ஏதேனும் நடைமுறைக்கணக்கு அல்லது சேமிப்புக்கணக்குத் தொடர்பில் பின்வருவன வற்றைத் தரும் கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண டும் :" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியைக் குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் —

"(அ) அம்மாதம் தொடர்பில் அவ்வங்கியால் பேணப்பட்ட எல்லா நடைமுறைக்கணக் கிலிருந்தும் சேமிப்புக்கணக்குகளி லிருந்தும் செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்தத்தொகை ;";

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன்மூலமும் ;

(ஈ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "எல்லா நடைமுறைக்கணக்குகளிலிருந்தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எல்லா நடைமுறைக்கணக்குகளிலிருந்தும் சேமிப்புக் கணக்குகளிலிருந்தும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(உ) பந்தி (உ) என்பதில் "ஒவ்வொரு நடைமுறைக் கணக்கிலும்" மற்றும் "இயைபான நடைமுறைக் கணக்கிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "ஒவ்வொரு நடைமுறைக் கணக்கிலும் சேமிப்புக் கணக்கிலும்" மற்றும் "இயைபான நடைமுறைக்கணக்கிலும் சேமிப்புக் கணக்கிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) ஓராம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) வர்த்தக வங்கியொன்று ஆறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணத்தொகைகளை அனுப்புகையில் ஏதேனும் விசேட நடைமுறைக் கணக்குத் தொடர்பில் அம்மாதம் தொடர்பில் அவ்வங்கியால் பேணப்பட்ட எல்லா விசேட நடைமுறைக்கணக்குகளிலிருந்தும் செய்யப் பட்ட பற்றுக்களின் மொத்தத் தொகையைத் தரும் கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(1ஆ) ஒரு வர்த்தக வங்கி அல்லது விசேட வங்கி ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும், அதன் சொந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் விவரங்களைத் தருகின்ற கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் :—

(அ) குறிப்பிட்ட ஒரு மாதத்தில் பற்றுக்கள் வரிக்கு ஆளான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பற்றுக்களின் மொத்தப் பெறுமதி ;

(ஆ) குறிப்பிட்ட ஒரு மாதத்தில் பற்றுக்கள் வரியாக மீளப்பெறப்பட்ட தொகைகள் ;

(இ) குறிப்பிட்ட ஒரு மாதத்திற்கு பற்றுக்கள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட கொடுக்கல், வாங்கல்களின் மொத்தப் பெறுமதி.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது : —

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து" என்னும் சொற்களுக்கும் மற்றும் "வர்த்தக வங்கியொன்று அறிக்கையிடுமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து அல்லது சேமிப்புக் கணக்கொன்றிலிருந்து" என்னும் சொற்களையும் மற்றும் "வர்த்தக வங்கியொன்று அல்லது விசேட வங்கியொன்று அறிக்கையிடுமிடத்து," என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும் ;

(2) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(அ) ஏதேனும் மாதத்தில் அந்த வர்த்தக வங்கியில் அல்லது விசேட வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து அல்லது சேமிப்புக் கணக்கொன்றிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்தத் தொகையின்மீது ; அல்லது ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "பேணப்படும் ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பேணப் படும் ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து அல்லது சேமிப்புக் கணக்கிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில்,

"செய்யும் நோக்கத்திற்காக" என்னும் சொற்களி லிருந்து "கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் :" என்பது வரையிலான சொற் களுக்குப் பதிலாக, "செய்யும் நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட விசேட கணக்கொன்றாகிய ஏதேனும் நடைமுறைக்கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் :" என்னும் சொற் களை இடுவதன் மூலமும் ;

(இ) அதன் (இ) என்னும் பந்தியில்,

(i) "செய்யப்பட்ட பற்றுக்கள், அத்தகைய கணக்கை வைத்திருப்பவரால்" என்னும் சொற்களிலிருந்து "ஒன்றினதும் அடிப் படையில்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "செய்யப்பட்ட பற்றுக்கள் —" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) உட்பந்தி (iii) என்பதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(iii) எவரேனும் ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் செய்யப்பட்ட (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட பங்குத் தொகுதியின் கொள்வனவு தொடர்பில், அத்தகைய பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதியின் வழங்கீட்டின்போது கொடுப்பனவுகளைச் செய்யும் :

(iii அ) எவரேனும் ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட பிணையங்களினதும் (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களினதும் கொள்வனவு தொடர்பில் அத்தகைய பிணையங்களின் அல்லது உண்டியல்களின் வழங்கீட்டின்போது கொடுப்பனவுகளைச் செய்யும் :".

(iii) அதன் (vii) என்னும் உட்பந்தியில் —

(i) "இன்னொரு வர்த்தக வங்கியினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய வங்கியினால், இன்னொரு வர்த்தக வங்கியினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) "வேறு நிதிசார் இடைவருநரினாற் பேணப்படும்" என்னும் சொற்களுக்

குப் பதிலாக, "நிதிசார் இடைவருகைச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள வேறு ஏதேனும் அமைப்பினால் பேணப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அதன் உட்பந்தி (vii) (இ) என்பதில் "வேறெவையேனும் நிதிசார் இடைவருநர்களின்" அல்லது "நிதிசார் இடைவருநருக்கும்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "நிதிசார் இடைவருகைச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள வேறு எவையேனும் அமைப்புக்களுக்கும்" அல்லது "நிதிசார் இடைவருகைச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iv) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (iii) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஆயினும், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) அத்துடன் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டதான விலக்களிக்கப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் தனியொரு விசேட நடைமுறைக் கணக்கொன்றின் ஊடாக வழி முறைப்படுத்தப் படுதல் வேண்டும். விலக்களிக்கப்பட்ட செயற்பாடு ஒவ்வொன்றுக்கும் புறம்பான வெளிப்படுத்துகையொன்று செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கணக்கு, பற்று வரி விலக்களிப்புச் செயற்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்ற பயன்பாட்டிற்குத் தனியொரு பொறுப்பேற்பொன்று செய்யப்படுதலும் வேண்டும்.";

(ஈ) அதன் (ஈ) என்னும் பந்தியில் —

(i) "ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து அல்லது சேமிப்புக் கணக்கிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

(ii) அதன் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(i) ஒரே கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் பேணப்படுகின்ற அதே வர்த்தக வங்கியில் அல்லது விசேட வங்கியில் அல்லது வேறு வர்த்தக வங்கிகளுக்கு அல்லது விசேட வங்கிகளுக்கிடையில் ஒரு நடைமுறைக்கணக்கிலிருந்து சேமிப்புக் கணக்கொன்றுக்கு அல்லது சேமிப்புக் கணக்கொன்றிலிருந்து நடைமுறைக் கணக்கொன்றுக்கு அல்லது ஒரு சேமிப்புக்கணக்கொன்றிலிருந்து வேறொன்றுக்கு கைமாற்றப்படுவதைக் குறிக்கின்ற வர்த்தக வங்கியொன்றில் அல்லது விசேட வங்கியொன்றில் வைத்திருக்கப்படும் அத்தகைய கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் ;" ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) "ஏதேனும் நடைமுறைக் கணக்குக்குச் செய்யப்பட்ட" அத்துடன் "வர்த்தக வங்கிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நடைமுறைக்குக் கணக்குக்கு அல்லது சேமிப்புக் கணக்குக்குச் செய்யப்பட்ட" மற்றும் "வர்த்தக வங்கிக்கு அல்லது விசேட வங்கிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான முதலாவது காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஆயினும், மேலும், வங்கிகள் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (i), (ii), (iii) என்னும் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட விலக்களிக்கப்பட்ட பற்றுக்கள் இனங்காணக்கூடியனவாக இருக்கும் விடயங்களில், வங்கியானது மேலே தேவைப்படுத்தப்பட்டவாறு, கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வெளிப்படுத்துகையொன்றில்லாமலேயே பற்றுக்கள் வரிக்கு விலக்களிக்கலாம். வங்கி எதற்கும், ஏதேனும் அத்தகைய விலக்களிப்பினால் செய்யப்பட்ட ஏதேனும் தவறுக்கெதிராக நட்டோத்தரவாதமளிக்கப்படமாட்டாது. விலக்களிப்பொன்றின்போது அவ்வாறு தவறொன்றைப் புரிகின்ற வங்கி எதுவும் தவறாக வழங்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு விலக்களிப்புத் தொடர்பிலும் பத்தாயிரம் ரூபா தண்டப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "நடைமுறைக் கணக்கிலுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நடைமுறைக்கணக்கிலுள்ள அல்லது சேமிப்புக்கணக்கிலுள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 14அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது, அச்சட்டவாக்கத்தின் 14அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

"ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர்.

14அ. ஆணையாளர் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, நியமிக்கப்பட்ட எவரேனும் ஆணையாளருக்கு அல்லது எவரேனும் பிரதி ஆணையாளருக்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளால் அல்லது அதன்கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட, சுமத்தப்பட்ட அல்லது

சாட்டுதல் செய்யப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கலாம்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு அப்பிரிவிற்கான ஓரக் குறிப்பிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"தவறுகள்"

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "பற்று" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "நடைமுறைக் கணக்கொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நடைமுறைக் கணக்கொன்றுக்கு அல்லது சேமிப்புக் கணக்கொன்றுக்கு" என்னும் சொற்களையும் மற்றும் "வர்த்தக வங்கியொன்றால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கியொன்றால் அல்லது விசேட வங்கியொன்றால்" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும் ;

(2) "சேமிப்புக் கணக்கு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"சேமிப்புக் கணக்கு" என்பது, (வெளிநாட்டு செலாவணிக் கணக்கொன்றை அல்லது தவணை வைப்புக் கணக்கொன்றைத் தவிர) உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அல்லது உரிமம்பெற்ற விசேட வங்கியொன்றில் பேணப்படுவதும் வட்டி செலுத்தப்பட்டாலுஞ்சரி செலுத்தப்படாவிட்டாலுஞ்சரி அத்தகைய வட்டிக்குத் தகைமைபெறுவதுமான ஏதேனும் கணக்கு என்று பொருள்படும் ;".

15. முதன்மைச் சட்டவாக்கத்திற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்கும் 2003 சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்தகாலத்து உள்ளடக்குப் பயன்.

சேமிப்புக் கணக்குகளிலிருந்து பற்றுக்கள் வரியின் சேகரிப்புக்கான நட்டோத்தரவாதம்.

16. (1) ஆறாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு 2003 சனவரி 1 ஆந் தேதி தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதி வரையிலான காலப்பகுதியின்போது ஏதேனும் சேமிப்புக்கணக்கிலிருந்து பற்றுக்கள் வரியை சேகரிக்கின்ற அல்லது அனுப்புகின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது உரிமம்பெற்ற விசேட வங்கி எதுவும் முறையான அதிகாரத்துடன் செயல்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குக்கெதிராக இத்தால் நட்டோத்தரவாதம் செய்யவும்படுகின்றது.

(2) எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியில் அல்லது உரிமம்பெற்ற விசேட வங்கியில் அவரால் பேணப்படும் சேமிப்புக் கணக்கொன்றிலிருந்து பற்றுக்கள் தொடர்பில் எந்தத் தொகையைச் செலுத்துவதற்கு அவர் ஆளாகவிருந்தாரோ அந்தத் தொகையைவிட மிதமிஞ்சிய பற்றுக்கள் வரியைச் சேகரிக்கின்ற அல்லது 13 ஆம் பிரிவால் அல்லது அதன்கீழ் பற்றுக்கள் வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டவாறான வங்கியொன்றில் அவரால் பேணப்படும் சேமிப்புக்கணக்கொன்றிலிருந்து செய்யப்பட்ட எவையேனும் அத்தகைய பற்றுக்கள்மீது பற்றுக்கள் வரியை எவரேனும் ஆளிடமிருந்து சேகரிக்கின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது உரிமம்பெற்ற விசேட வங்கி எதுவும் 2003 சனவரி 1 ஆந் தேதியிலும் அதன்பின்னரும் தொடங்குகின்றதும் விடயத்துக்கேற்ப அத்தகைய தொகையின் மீளளிப்பொன்று செய்யப்படும் தேதிவரையிலும் அல்லது அத்தகைய தொகை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படும் தேதிவரையிலுமான காலப்பகுதியின்போது, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிற்கெதிராக இத்தால் நட்டோத்திரவாதம் செய்யப்படுகின்றது.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

17. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.